Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 276

சனிக்கிழமை
30 ஓகஸ்ட் 2025

ஆவணி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## நாவற்குழியில் காணாமற்போனோர்; ஆட்கொணர்வு மனு; ஒக்ரோபரில் தீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 30
நாவற்குழியில் 1996ஆம் ஆண்டு இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 24 பேரில் 3 பேர் தொடர்பான ஆட்கொணர்வு 11

தமிழர் தாயகத்தில் இன்று

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி எழுச்சிப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 30
வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்குச் சர்வதேச நீதிகோரி தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று போராட்டங்களும், பேரணிகளும் இடம்பெறவுள்ளன. 11




## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இப்போதாவது நீதியை வழங்கு

யாழ்.நகரில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக. 30
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதியை வலியுறுத்தி, யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட் 11



## இனப்படுகொலைக்கு நீதிகோரி வடக்கில் கையெழுத்துப் போர்

யாழ்ப்பாணம், ஓக. 30
செம்மணி உட்பட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மனிதப் புதைகுழிகளுக்கும், இனப்படுகொலைகளுக்கும் நீதிகோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கையெழுத்துச் சேகரிப்புப் போராட்டம் 11

## மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினார் ரணில்!

ஒய்விலிருக்க அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக. 30
கொழும்பு தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று வீட்டுக்குத் திரும்பியுள்ளார். 11



## பிணைந்த நிலையில் என்புத்தொகுதிகள்!

யாழ்ப்பாணம், ஓக. 30
செம்மணிப் புதைகுழியில் இருந்து, ஒன்றுடன் ஒன்று பிணைந்த நிலையில் இரண்டு என்புத் தொகுதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. 11

செம்மணிப் புதைகுழியில்

## 10 என்புத்தொகுதிகள் நேற்று அடையாளம்!

யாழ்ப்பாணம், ஓக. 30
அரியாலை செம்மணிப் புதைகுழியில் இருந்து, நேற்று மேலும் பத்து என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அரியாலை செம்மணிப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி 11

## 130,000 ஒப்பங்களுடன் ஐ.நா.வில் நீதியின் ஓலம்

யாழ்ப்பாணம், ஓக. 30
ஒரு லட்சத்து 30 ஆயிரம் கையொப்பங்களுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கு 'நீதியின் ஓலம்' அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அந்தத் திட்டத்தின் வடக்கு இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்தார். இனப்படு 11

## மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்த முயற்சி

பிரதமர் ஹரிணி உறுதி



கொழும்பு, ஓக. 30
எல்லை நிர்ணயப் பிரச்சினையால் தான் மாகாணசபைத் தேர்தல் தாமதமடைகின்றது. மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய 11



## மருத்துவர்களின் வட்ஸ் அப்களை கையகப்படுத்தும் குற்றக்குழு!

அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 30
யாழ்ப்பாணத்தில் மருத்துவர்களின் வட்ஸ்அப் இலக்கத்தை ஹக் செய்யும் குற்றக்குழு, அந்த வட்ஸ் அப் இலக்கத்தைச் செயலிழக்கச் செய்து பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டுவருதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. அமெரிக்கா, நைஜீரியா 11

## அத்துரலியவுக்கு விளக்கமறியல்!

விரிவு
பக்கம்:- 02

### முச்சந்தி முரளி

'இனி வட்ஸப் என்டாலே வைரஸைக் கண்டமாதிரி எல்லாரும் கலங்கப்போயினம் கண்டியளோ'

இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவு

## 2,000 ரூபா நினைவுத்தாள் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஓக. 30
இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இரண்டாயிரம் ரூபா நினைவுத்தாள் வெளியிடப்பட்டுள்ளது. 11

## டிப்பரின் பின்னால் மோதுண்டு இரு இளைஞர்கள் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஓக. 30
கிளிநொச்சி - பரந்தன் அரச விதை உற்பத்தி நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற கோர விபத்தில், இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4178
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 11 22 29 71
விசேட எழுத்து Y

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1245
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 05 28 41 56

**NLB ஜய**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0204
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 7 5 8 8

**மெகா பவர்**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2284
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 31 57 77 78

**மஹஜன சம்பத**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5936
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 8 8 3 5 1 9

**தன நிதானய**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1966
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 21 31 49 57
விசேட எழுத்து L

**அத சம்பத**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0511
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 3 5 1 9

**சுப தவசக்**
திகதி 29.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0052
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 01 23 24 42

# ஆட்சேர்ப்புக்குத் தடையாகவுள்ள 4 வழக்குகள் இறுதிக்கட்டத்தில்!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.30**
**பட்டதாரிகளை ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படாமைக்கான முக்கியமான காரணமாக உள்ள உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படும் நான்கு வழக்குகளின் சட்டநடவடிக்கை தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது என்று கல்வி அமைச்சரும், பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்ததும், தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். அதன்மூலம் பட்டதாரிகள் ஆசிரியர் ஆட்சேர்ப்புத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வழியேற்படுத்தப்படும். ஏற்கனவே வழங்கப்பட்ட அமைச்சரவை ஒப்புதல்களுக்கு இணங்க, பிற பட்டதாரி ஆட்சேர்ப்புச் செயல்முறைகளைத் தொடரத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன - என்றார்.
ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான தற்போதைய வயது வரம்பை நீடிப்பது தொடர்பிலும் கலந்துரையாடலின் போது ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், தற்போதுள்ள அனைத்து ஆசிரியர் வெற்றிடங்களையும் உடனடியாக நிரப்புவதற்கான ஆட்சேர்ப்புச் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு பரஸ்பர இணக்கப்பாடு காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# ரணிலின் கைது விடயத்தில் சுயாதீனத்தன்மை இல்லை!

## அஜித் பி பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.30
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது விடயத்தில் பொலிஸ் துறை சுயாதீனமாகச் செயற்படவில்லை. நீதித்துறைச் சம்பிரதாயங்கள் மீறப்பட்டுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இவை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களமும், பொலிஸ் ஆணைக்குழுவும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். வரலாற்றில் முதன் முறையான குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற அதிகாரியொருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டதன் பின்னணியில் பொலிஸ்துறையின் சுயாதீனத்தன்மை இழக்கப்பட்டுள்ளமை துரதிஷ்டவசமானதாகும். இது ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபருடன் தொடர்புடைய காரணியல்ல. நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலாகும் - என்றார். (எ-இ)

# ஓய்வூதியர்கள் கொடுப்பனவு நிலுவைகள் இம்மாதத்துக்குள்

கொழும்பு, ஓக.30
அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய நிலுவைத்தொகை இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சைபர் தாக்குதலின் பின்னர் அரச ஊழியர்களின் தரவுக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக சில ஓய்வூதியர்களின் கொடுப்பனவைச் சுமார் 4 மாதங்களாக முழுமையாகச் செலுத்தமுடியவில்லை என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.
அதேவேளை, இந்த மாதத்துக்குள் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவு வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அண்மையில் தெரிவித்திருந்தது. 5 இலட்சத்து 99 ஆயிரத்து 730 பயனாளர்களுக்கான கொடுப்பனவுக்காக அரசாங்கத்தால் சுமார் 2 ஆயிரத்து 900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# அத்துரலியவுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஓக.30
நுகேகொடை நீதிமன்றத்தில் முன்னிலையான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரருக்கு விளக்கமறில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
2020 ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதற்காக, அபேஜன பலக் கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கடத்தி, அவரை அச்சுறுத்தியமை தொடர்பில் அத்துரலிய ரத்தன தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். (சு-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 29.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0644
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 2 1 1 3 0 5

**Super Ball**
திகதி 29.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2910
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 08 52 61 70

**சனிதா**
திகதி 29.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 02 03 08 09
வெற்றி வாரம் 5071

**SASIRI**
திகதி 29.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0758
வெற்றி இலக்கம் 19 43 50

**லக்ன ராசி**
திகதி 29.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம் 03 04 39 50
சீட்டிழுப்பு வாரம் 4622

**KAPRUKA**
திகதி 29.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கம் 01 19 44 63
வெற்றி வாரம் 2086

**அத கோடிபதி**
திகதி 29.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 12 47 51 74
வெற்றி வாரம் 2736



# சரணடைந்தார் ராஜித மறியலில் வைக்க உத்தரவு

கொழும்பு, ஓக.30
இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று ஆஜரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
மோதரை மீன்வளத் துறைமுகத்தைக் குறைந்த விலையில் தனியார் நிறுவனமொன்றுக்குக் குத்தகைக்குவிட மீன்வளக் கூட்டுத்தாபன இயக்குநர்கள் குழுவை நிர்ப்பந்தித்ததாக இவர்மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வன்னி மாவட்டத்தில்

# ஆளணிப் பற்றாக்குறையில் சித்த வைத்தியசாலைகள்!

**முல்லைத்தீவு, ஓக. 30**
**வன்னிப்பிராந்தியத்தில் காணப்படும் பல சித்த வைத்தியசாலைகள் வைத்தியர்கள் இன்றி இயங்குகின்றன. இதனால் பல சித்த வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன், பல சித்த வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயத்தில் இருக்கின்றன என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர்மேலும்தெரிவிக்கையில், குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பல சித்த வைத்தியசாலைகளில் இந்தச் சிக்கல் நிலை காணப்படுகின்றது. அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 13 சமூகநல மருத்துவர் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதேநிலைமைகள் வவுனியாவிலும் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்ற நிலை காணப்படுகின்றது.
எனவே குறித்த பதவி வெற்றிடங்களுக்கு ஐந்து வருடகால கற்கைநெறியையும், ஒரு வருடகால உள்ளகப் பயிற்சி நெறியையும் முடித்து நீண்டகாலமாக அரச சேவையில் இணைவதற்கு எதிர்ப்பார்த்துக் காத்திருக்கின்ற சுதேச வைத்தியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ச-26, 246)

## சகல அரச நிறுவனங்களிலும் விரல் அடையாளம் கட்டாயம்

கொழும்பு, ஓக.30
விரலடையாள இயந்திரங்களில்லாத அரச நிறுவனங்கள் சகலவற்றிலும் விரைவில் இயந்திரங்களூடாக வரவுக் கையொப்பம் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளன.
ஏற்கனவே அரச நிறுவனங்கள் பலவற்றில் விரலடையாளப் பதிவு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தாலும், பல நிறுவனங்கள் இன்னும் இந்த முறையைப் பின்பற்றவில்லை.
தற்போதைய அரசாங்கம் கூடுதல் நேரக் கொடுப்பனவுகளை அதிகரித்துள்ளது.
இந்தக் கொடுப்பனவுகள் துல்லியமாக வழங்கப்படுவதை உறுதிசெய்வது அவசியம். அந்தவகையில் விரலடையாளப் பதிவு இயந்திரங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## உயர்மதிப்பீட்டைப் பெற்ற மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஓக.30
இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, குளோபல் பைனான்ஸின் 2025ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியாளர் அறிக்கை அட்டைகளில் உயரிய 'ஏ' தர மதிப்பீட்டைப் பெற்றுள்ளார். இதன்மூலம் உலகின் மரியாதைக்குரிய மத்திய வங்கி ஆளுநர்களின் பட்டியலில் அவர் இடம்பிடித்துள்ளார்.
கடுமையான பொருளாதாரப் பிரச்சினையை நாடு சந்தித்தபோது நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதில் அவரது பங்களிப்பு மற்றும் மூலோபாய அறிவு ஆகியவை இந்த மதிப்பீட்டுக்கு காரணமாக அமைந்துள்ளன. (எ-இ)



## பங்குச்சந்தை அபாரம்

கொழும்பு, ஓக.30
கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்து பங்கு விலைக் குறியீடும் நேற்றுக் காலை 21 ஆயிரம் அலகுகளை எட்டியுள்ளது.
வரலாற்றில் முதன்முறையாக ஒரு தினசரி வர்த்தக அமர்வில் அனைத்து பங்கு விலைக் குறியீடும் 21,000 புள்ளிகளை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## இவ்வருடத்தில் இதுவரை 89 துப்பாக்கிச்சூடுகள்!

கொழும்பு, ஓக.30
இலங்கையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 89 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின்போது 48 பேர் உயிரிழந்துள்ளனர். 50 பேர் காயமடைந்துள்ளனர்.
அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ச-இ)

## மூத்த ஊடகவியலாளர் பரமேஸ்வரன் கௌரவிப்பு

வவுனியா, ஓக.30
கலிபோர்னியாவைத் தளமாகக்கொண்டு செயற்பட்டுவரும் 'அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனம்' ஆண்டுதோறும் புலத்திலுள்ள பல்வேறு துறைகளில் சிறப்பாகச் செயற்பட்ட மூத்தவர்களையும், இளையவர்களையும் கௌரவித்துவருகிறது.
இந்த வருடம் மூத்த ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரனைக் கௌரவிக்கவுள்ளது. இந்தக் கௌரவிப்பு நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலர் தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. கடந்தகாலத்தில் மூத்த ஊடகவியலாளர்களான மாணிக்கவாசகர்,ராதேயன் ஆகியோரை குறித்த நிறுவனம் கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

## வட்ஸப்பில வருகுது பேய்

**வடக்கில இருக்கிற டாக்குத்தர்மாரெல்லாம் இப்ப வட்ஸப்பில கோல் வந்தால் பேயைக் கண்டமாதிரி தெறிச்சு ஓடுகினமாம். அந்தளவுக்கு அவையளைக் குறிவைச்சு வட்ஸப்பில ஒரு 'ஹக்கிங்' கும்பல் இரவு பகல் எண்டு பாராமல் 'அட்டாக்' பண்ணுதாம். நைஜீரியா, அமெரிக்கா மாதிரி நாடுகளின்ர ரெலிபோன் நம்பர்களில இருந்து டாக்குத்தர்மாருக்கு ஒரு கோல் வரும். அதை ஆன்ஸர் பண்ணிக் கதைச்சால் "நான் டொக்டர் ராஜா கதைக்கிறன்" எண்டோ "டொக்டர் நஜீம் கதைக்கிறன்"எண்டோ சொல்லிப்போட்டு "ஒரு சூம் மீற்றிங் இருக்குது. அதுக்கு ஓ.ரி.பி. நம்பர் இல்லாட்டி 'லிங்க்' வரும் அதை அனுப்புங்கோ" எண்டிட்டு அந்தக் கோல் 'கட்' ஆகிடும். அதுக்குப் பிறகு ஓ.ரி.பி. நம்பரை அவைக்கு அனுப்பினாலோ இல்லாட்டி 'லிங்கைக்' க்ளிக் பண்ணி னாலோ டாக்குத்தர்மாரின்ர வட்ஸப்புக்கு பேய் பிடிச்சு ஆட்டும். அந்த வட்ஸப்பில இருக்கிற எல்லாரின்ர நம்ப ருக்கும் "எனக்கு திடீரெண்டு ஒரு இறுக்கமான நிலைமை. எனக்கு ஒரு லட்சம் ரூபா காசு அனுப்பேலுமோ?" எண்ட மாதிரி மெசெஜ் பறக்கும். "இதென்னடா இப்பிடிப் பேமஸான டொக்டருக்கு இப்பிடி ஒரு காசுக்கஷ்டமோ?" எண்டு பரி தாபப்பட்டு, திரும்ப அந்த நம்பருக்கு "எந்த நம்பருக்கு அனுப்போணும்?"எண்டு மெசெஜ் போட்டீங்கள் எண்டால், உங்கட நம்பருக்கும் அந்த வட்ஸப் பேய் தொத்திடும். நல்ல காலத்துக்குக் கனபேர் "ஏன் டொக்டர் இப்பிடி மெசெஜ் போடுறார்? அவரின்ர வட்ஸப்பை ஆரும் ஹக் பண்ணிட்டினமோ?" எண்ட டவுட் வந்து, நோர்மல் கோல் எடுத்துக் கதைச்சதால தப்பிட்டினமாம்.**

**அதைவிட இன்னொரு சோகமும் இருக்கு. இப்பிடி வட்ஸப் 'ஹக்' செய்யப்பட்ட டொக்டர்மாருக்கு நோர்மல் கோல் எடுத்தாலும், தங்கட நம்பரையும் கண்டுபிடிச்சு ஹக் பண்ணிப்போடுவாங்களோ எண்ட பயத்தில கனபேர் அந்த டாக்குத்தர்மாருக்குக் கோலே எடுக்கிறேலையாம். அதோட இனி ஆரையெல்லாம் உந்த 'ஹக்கிங்' கும்பல் குறிவைச்சிருக்கோ?எப்ப தங்களுக்கும் இப்பிடிக் கோல் வருமோ? எண்ட பயத்தில டாக்குத்தர்மார் இருக்கினமாம். வட்ஸப்பைக் ஹக் பண்ணினதோட நிக்காமல், போனில இருக்கிற வங்கிக்கணக்கையும் தங்கட கட்டுப்பாட்டுக்குள்ள அந்தக் கும்பல் கொண்டுவாறதுக்குத்தான் இப்பிடிச் செய்யினமோ எண்டும் டாக்குத்தர்மாருக்கு 'டவுட்' வந்திருக்கு. சில டாக்குத்தர்மார் புத்திசாலித்தனமா தங்கட போனில இருக்கிற வட்ஸப்பையே அழிச்சுப் போட்டினம். "என்ன தேவையெண்டாலும் நோர்மல் கோல் எடுங்கோ. ஏதும் டொக்கியுமெண்ட்ஸ் அனுப்பிறதெண்டால் மெயில் பண்ணுங்கோ" எண்டு சொல்லுகினமாம்.**

**அதையெல்லாத்தையும்விட எப்பிடி டாக்குத்தர்மாரை மட்டும் உந்த வட்ஸப் 'ஹக்கிங்' கும்பல் குறிவைச்சு அமத்துகினம் எண்டும் கனபேருக்குச் சந்தேகம். ஆரோ அவைக்குத் தெரிஞ்ச சிலர்தான் இப்பிடிக் ஹக் பண்றவையிட்ட நம்பரைக் குடுத்து அலுப்புக் குடுக்கோணும். இல்லாட்டி டாக்குத்தர்மார் இருக்கிற வட்ஸப் குருப்பில இந்த 'ஹக்கிங்' கும்பலைச் சேர்ந்த ஆரோ ஒராள் புகுந்து, முழு நம்பரையும் எடுத்து விளையாட்டுக் காட்டுகினம். இப்பத்தைக் காலத்தில வட்ஸப்பை வைச்சே டாக்குத்தர்மார் கனக்க வேலையளைச் செய்து முடிக்கினம். அப்பிடிப்பட்ட நிலையில இப்பிடி ஹக் பண்ணி, அவையைப் பயப்பிடுத்தி, அவையோட தொடர்பில இருக்கிறவைக்கும் ஆய்க்கினை குடுத்தால் அவை என்னதான் செய்யிறது? சில டாக்குத்தர்மார் 'சைபர் கிரைம்' பிரிவில இதைப் பற்றி முறைப்பாடு செய்திருக்கினமாம். வெளிநாட்டுக்குப் போய் அங்க இருக்கிற குற்றவாளியளையே கண்டுபிடிக்கிற பொலிஸ், இந்த வட்ஸப் கள்ளரைக் கண்டுப்பிடிக்கினமோ எண்டு பாப்பம்.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும்காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்லதகவல் இன்று வந்துசேரும். அலுவலகத்தில் அதிகாரிகளின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். உறவினர்களுக்காக செலவுசெய்ய நேரிடும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள். ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும் அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத்தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.



## 9

எண் 9 (9,18, 27)இல் பிறந்தவர்கள் பெரும்பாலும் எல்லா விஷயங்களிலும் பொது அறிவு நிரம்பப் பெற்றிருப்பார்கள். கலா ரசிகர்களாகவும், விநோதப் பிரியர்களாகவும் இருப்பார்கள். எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் தமக்குத் தெரிந்த விஷயம் போலவே காட்டிக்கொள்வார்கள். பிறர் கூறும் விஷயங்களை அப்படியே அங்கீகரிக்காமல் தனக்கென ஒரு கொள்கையை வைத்திருப்பார்கள்.
எதையுமே தனக்குப் பிடித்த மாதிரித்தான் செய்ய வேண்டுமென்ற பிடிவாதக் குணம் இருக்கும். வெகுளியாகவும் கபடமற்றும் காணப்படும் இவர்கள் எந்தவொரு விஷயத்தையும் ரகசியமாக வைத்திராமல் மனம் திறந்து பேசுவார்கள்.
வாதப் பிரதிவாதங்களில் திறமையோடு வாதித்து தனது அபிப்பிராயத்தை அங்கு நிலைநாட்டி எதிரிகளை வெற்றி கொள்ளும் ஆற்றல் இருக்கும். தன்னிடத்தில் அன்பும் பாசமும் கொண்டவர்களுக்கு எந்தவிதத் துன்பங்கள் நேர்ந்தாலும் அவற்றைத் துணிச்சலுடன் எதிர்த்து அவர்களுக்கு உதவி செய்வார்கள். தனது அந்தஸ்துக்கும் புகழுக்கும் பழுது ஏற்படாத பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்கள். மன அமைதியை இழக்கக்கூடிய சூழ்நிலைகள் வந்தாலும் அதைப் பிறருக்குத் தெரியாதவாறு மறைத்துக்கொள்வார்கள்.
ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் என்பதால் இயற்கையிலேயே அஞ்சா நெஞ்சமும் தைரியமும் படைத்தவர்களாக இருப்பார்கள். இவர்கள் காரியவாதிகள். ஆதலால் வீண் பழிச்சொற்களுக்குச் செவி சாய்க்கமாட்டார்கள். இவர்களது சுயேச்சையான சுபாவத்தையும், அகங்காரக் குணத்தையும் கண்டு இவர்களை நேசிப்பவர்கள்கூட சில சமயம் வெறுப்படைந்து விடுவார்கள். பெரியவர்களிடத்தில் மரியாதையும், சிறியவர்களை அடக்கியாளும் குணமும் இருக்கும். மற்றவர்களின் குற்றம் குறைகளைக் கண்டுபிடித்து அம்பல மாக்குவதில் தனிக் கவனம் செலுத்துவார்கள். இவர்களைத் துணையாகக் கொண்டால் எந்தக் காரியத்திலும் எதையும் சாதித்த வெற்றிபெறமுடியும்.

**குடும்ப வாழ்க்கை :** ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு காதல் திருமணம் நடைபெறக்கூடிய வாய்ப்புகள் அதிகம். அதில் பாதிப்போருக்கு சுகமான சுபிட்சமான வாழ்க்கையும், வாழ்க்கைத் துணையால் முன்னேற்றங்கள் போன்றவை அமைந்தாலும் பாதிப்போருக்குக் குடும்ப வாழ்க்கையில் சிக்கல்களும் குழப்பங்களும் உண்டாகிறது. இதனால் விரக்தியான மனோநிலைகளும் ஏற்படுகின்றன.
இதனால் எதையும் சிந்தித்துச் சரியான முறையில் அனுசரித்து நடந்தால் மட்டுமே நற்பலனைப் பெறமுடியும்.

**பொருளாதார நிலை:** ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் சகல வசதிகளையும் பெற்று சுக வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள். இவர்களுக்குத் தேவைக்கேற்ப பணவசதி ஏற்படுமே தவிர சேமிக்கும் அளவிற்கு இருக்காது. வரவுக்கேற்ற செலவுகளும் உண்டாகும். வாழ்க்கையின் முற்பாதியில் பொருளாதார நிலையில் சங்கடங்கள் இருந்தாலும் பிற்பாதியில் வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கொள்வார்கள். பெரும்பாலும் தங்களுடைய கௌரவத்தையும், அந்தஸ்தையும் உயர்த்திக் கொள்ள எப்பாடுபட்டாவது சம்பாதித்து முன்னேறிவிடுவார்கள்.

**தொழில்:** ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் எந்தத் தொழிலை ஏற்றுக்கொண்டாலும் அதைத் திறம்பட நிர்வாகிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். இவர்களுக்குப் பெரும்பாலும் அரசாங்கத்தில் அதிகாரம் செய்யக்கூடிய உயர்பதவிகள் கிடைக்கும். ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் வீரத்தின் சின்னமாக விளங்குகிறார்கள். இவர்களுக்கு அதிகார தோரணையும்,பிறருக்கு அடிபணியாத குணமும் இருக்கும்.

**அதிர்ஷ்ட திகதி : 9,18,27, அதிர்ஷ்ட நிறம் - சிவப்பு, அதிர்ஷ்ட திசை - தெற்கு, அதிர்ஷ்ட கிழமை - செவ்வாய், அதிர்ஷ்ட கல் - பவளம் , அதிர்ஷ்ட தெய்வம் - முருகன்**

# நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஓக.30
தமிழர் வாழ்வுரிமை மையத்தின் ஏற்பாட்டில் கிருஷாந்தி கொலைவழக்கு விசாரணைத் தொகுப்பு நூலான 'வன்மம்' எனும் நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி மாலை 4மணிக்கு செம்மணிச் சந்தியில் இடம் பெறவுள்ளது.
தெ.மதுசூதனன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் அருட்பணி வசந்தன், நாகமுத்து இன்பநாயகம், தரிந்து உடுவரகெதர, யூட் டினேஷ், வீரசிங்கம், நடராஜர் காண்டீபன், பொ.ஐங்கரநேசன், கத்யான அமரசிங்க, நடராஜா ஜனகன், ரணித்தா ஞானராஜா, உதயசீலன் கற்கண்டு ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (சு-41)

# அமிர்தலிங்கம் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஓக.30
அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த முதலாவது தமிழரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 98ஆவது பிறந்தநாள் நினைவுப்பேருரை இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை "அதிகாரப் பரம்பல், அதிகாரப்பகிர்வு, பிராந்திய அபிவிருத்தி" எனும் தலைப்பில் நினைவுப்பேருரையையும், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் "தேசம் தேசியம்" எனும் தலைப்பில் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## புலம்பெயரிகள் இப்படியும் செய்யலாமே!

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்து, பொருண்மியத்தில் நலிவடைந்த 111 இணையர்களுக்கு ஒரேதடவையில் திருமணம் செய்துவைக்கப்பட்டிருக்கின்றது. சிங்கப்பூரில் வாழ்ந்துவரும் புலம்பெயர் உறவுகளால், யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பொருண்மியம் நலிவடைந்தவர்களுக்கே, இந்தத் திருமணச் சடங்கு பெரியவர்கள் உறவினர்கள் முன்னிலையில் வெகுசிறப்பாக நிறைவேறியிருக்கின்றது. பெயருக்கும் புகழுக்கும் என்றல்லாமல், திருமணத்துக்குத் தேவையான அனைத்துச் செலவுகளையும் அந்தப் புலம்பெயர் உறவுகள் பொறுப்பேற்று உடுபுடைவைகள், மாங்கல்யம் என்பனவற்றைப் பெற்றுக்கொடுத்து முறைப்படியும் - கோலாகலமாகவும் இந்தத் திருமணச் சடங்கை நிறைவேற்றியிருக்கின்றனர்.


தமிழர்களின் பகுதிகளில், குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் அண்மைக்காலமாக ஆடம்பரப் போக்கும், பகட்டான நடவடிக்கைகளும் மிகையாக அதிகரித்திருக்கின்றன. கோயில் திருவிழாக்களில் பல இலட்சங்களைச் செலவழித்து இந்தியாவில் இருந்து இசைக்கலைஞர்களை இறக்குமதி செய்தல், பலகிலோமீற்றர் தூரத்துக்கு மின்னொளி அலங்காரங்கள் செய்தல், பலகோடி ரூபாக்களைக் கொட்டி ஆலய ஆகம விதிகளில் இல்லாத புதுப்புதுக் கட்டுமானங்களை அமைத்தல் என்று தங்கள் பணப்பலத்தைப் போட்டி போட்டுக்காட்டும் களமாக ஆலயங்களை மாற்றிவருகின்றனர் புலம்பெயர் உறவுகள். அது மட்டுமல்லாமல், யானைகளின் அணிவகுப்பு, கவர்ச்சி நடனங்கள் என்று திருவிழாக்களில் திகைப்பூட்டும் விடயங்களும் நீட்சிபெறுகின்றன. இவ்வாறான நிலையில்தான், வரலாற்றுத் திருப்பமாக பொருண்மியத்தில் நலிவடைந்த 111இணையர்களைக் கரைசேர்த்த கைங்கரியத்தை ஆற்றியிருக்கின்றான் ஆற்றங்கரையான்.

தமிழ்த்தேசியம் என்பது உணர்ச்சிப்பாடல்களிலும், சிவப்பு மஞ்சள் கொடிகளிலும், நினைவேந்தல்களிலும், சிங்கள பௌத்த எதிர்ப்பிலும் மாத்திரம் தங்கியுள்ள விடயமல்ல. இனத்தின் இருப்பையும், வளத்தையும் பாதுகாக்கும் அத்தனை நடவடிக்கைகளும் தமிழ்த்தேசியம்தான். ஆதலால்தான், இயற்கையைத் தக்கவைக்கும் மரநடுகைத் திட்டங்களைக்கூட தமிழ்த்தேசிய இருப்பின் அடிப்படையிலான வெளிப்பாடாகத் தேசியத் தலைவர் கருதினார். செல்வச்சந்நிதியில் 111இணையர்களுக்கு செய்துவைக்கப்பட்டிருக்கும் திருமண வைபவமும் தேசியத்தின் வழியில் நோக்கத்தக்க மிகச்சிறந்த முன்னெடுப்பே.திருவிழாக்களின்போதான ஆடம்பரக் கொண்டாட்டங்கள், எவ்வளவு விரைவாக புலம்பெயர் தமிழர்களால் பிரதியெடுக்கப்பட்டதோ அதைவிட பலமடங்கு விரைவாக இவ்வாறான நல்ல செயற்பாடுகளும் பிரதியெடுக்கப்படவேண்டும். போரின் பாதிப்பை நேரடியாக எதிர்கொண்ட பகுதிகளில் இன்று ஏராளமான இணையர்கள் வறுமையின் பிடியில் சிக்கி, முறைப்படியான சமயாசார திருமண உறவுக்குள் நுழையாமல் வாழ்ந்துவருகின்றனர். அவ்வாறானவர்களுக்கு இத்தகைய திட்டங்கள் ஒரு பேரொளியாக அமையும். வடக்கு-கிழக்கை முதலீடுகளைப் பெருக்கும் தளங்களாக மட்டுமல்லாமல், இவ்வாறான உதவிகள் தேவைப்படும் இடங்களாகவும் பார்க்கும் பாங்கு மேம்பட ஆற்றங்கரையான் அருள்பாலிக்கட்டும்.

நாளொரு நல்வார்த்தை


முயற்சியை நிறுத்தாதீர்கள் சிறிய வெற்றிகள்கூட, பெரிய வெற்றிக்கான அடிக்கல்

அப்துல் கலாம்




இலங்கையில்

## பாதுகாப்பற்ற நிலையில் 14,834 குழந்தைகள்



கொழும்பு, ஓக.30

நாடு முழுவதும் சுமார் 14 ஆயிரத்து 834 குழந்தைகள் பாதுகாப்பற்றநிலையில் இருப்பதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட பல்துறை போதைப் பொருள் தடுப்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு நிகழ்வில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு முழுவதும் சுமார் 14,834 குழந்தைகள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றனர். பொலிஸ் நிலையங்களால் அடையாளம் காணப்பட்டு எங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பல குழந்தைகள் உள்ளனர். குழந்தைகளை மீட்பது மட்டுமல்லாமல், குடும்பத்தை மையமாகக்கொண்ட பராமரிப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்- என்றார். (ச-இ)

## பண்டாரகமவில் துப்பாக்கிச்சூடு; இருவர் கைது

பண்டாரகம, போல்கொட பாலத்துக்கு அருகில் சிறைச்சாலை முன்னாள் அதிகாரி ஒருவரைச் சுட்டுக்கொன்ற சம்பவத்துக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை, மொடராவிலப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரண்டு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பாணந்துறையைச் சேர்ந்த 18 மற்றும் 21 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## காற்றின் வேகம் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக.30

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்று மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 -40 கிலோமீற்றர் வரை காணப்படும் என வளிமண்டலத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சிலாபத்திலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. அத்துடன் கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பல்கலையில் பகிடிவதை; 4 மாணவர்கள் கைது

கொழும்பு, ஓக.30

களனிப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர் ஒருவரைப் பகிடிவதைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் அதே பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் நான்கு மாணவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்களான பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பகிடிவதைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூன்று பல்கலை மாணவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் திருட்டு; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 30

பாடசாலை மாணவனின் துவிச்சக்கரவண்டியைத் திருடிய குற்றச்சாட்டில் பெண்ணொருவரைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை குறித்த மாணவன் பாடசாலைக்குச் செல்வதற்காக வீடொன்றில் சைக்கிளை நிறுத்திவிட்டுச் சென்ற நிலையில் மதியம் திரும்பிவந்து பார்த்தபோது சைக்கிளைக் காணவில்லை.

அதனையடுத்து வீட்டு உரிமையாளரின் பாதுகாப்புக் கமராவைப் பார்வையிட்டபோது பெண்ணொருவர் எடுத்துச்சென்றமை அவதானிக்கப்பட்டது. இந்தநிலையில் குறித்த பெண் நேற்றுமுன்தினம் குறித்த சைக்கிளைத் திருடிய வீட்டில் கொண்டுசென்றுவிடச் சென்றவேளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியநிலையில் எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-28)



# கைகளுக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை

## கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தில் கண்டனப் போராட்டம்

**கிளிநொச்சி, ஓக.30**

**கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு நீண்டகாலமாக இயங்காமல் இருப்பதைக் கண்டித்தும், அதனை விரைவாக செயற்படுத்தக் கோரியும், அங்குள்ள அதிநவீன மருத்துவ உபகரணங்களை வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்லும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மருத்துவமனை வளாகத்தில் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.**

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

நெதர்லாந்து அரசாங்கத்தின் பல மில்லியன் ரூபா நிதியில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணத்துக்கான இந்த மகளிர் சிகிச்சை மையம் அதிநவீன வசதிகளுடனும் நவீன மருத்துவ உபகரணங்களுடனும் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது. குறித்த சிகிச்சைமையம் திறக்கப்பட்டு ஒரு வருடத்தைக் கடந்தும் இன்றுவரை எந்தவொரு செயற்பாடும் இன்றிக் காணப்படுகிறது.

செயற்கை முறைக் கருத்தரித்தல், கர்ப்பகாலம், பிரசவகாலம், பிரசவத்திற்கு பிந்திய காலம், கருவில் உள்ள குழந்தைகளுக்கான சிகிச்சை, குழந்தை சிகிச்சை, மார்பகப் புற்றுநோய், கருப்பைக் கழுத்து புற்றுநோய்களை கண்டறிவதற்காக நவீன மருத்துவ உபகரணங்கள் எனப் பெண்களுக்கான விசேட சிகிச்சை மையமாக இது அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணப் பெண்களுக்குக் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை என்பது போல இந்தச் சிகிச்சைமையம் இயங்காது காணப்படுகின்றது. தொடர்ச்சியாக செயற்பாடின்றிக் காணப்படுமாயின் இங்குள்ள பெறுமதிமிக்க மருத்துவ உபகரணங்கள் கூட பழுதடையக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும் - என்றனர். ஆர்ப்பாட்டத்தின் கோரிக்கைகள் அடங்கியமனு, வடக்குமாகாண ஆளுநர், மத்திய சுகாதார அமைச்சர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-214)



வரலாற்றுச் சிறப்புமிக்க சாவகச்சேரி நகர் செருக்கல்பதி சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த பெருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-28)

# சாவகச்சேரி பிரதேசசபை அமர்வில் செய்திசேகரிப்பாளர்களுக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

சாவகச்சேரிப் பிரதேசசபையின் 3ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது ஊடகவியலாளர்களுக்குச் சபையின் செயலாளரினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதேசசபை உறுப்பினர் மயூரன், "முதலாவது அமர்விலேயே சபை அமர்வுகளுக்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எதற்காக ஊடகங்களுக்கு இப்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது? உடனடியாக ஊடகங்கள் அனுமதிக்கப்படவேண்டும்" எனக் குறிப்பிட்டார். அதன் பின்னரே செயலாளரினால் ஊடகங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. (ச-28)

# பசுமை இயக்கத்தின் அரசியல் உரையரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 30

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் உரையரங்கு நிகழ்வு பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் கூட்டுறவுநகர் மேல்மாடியில் அமைந்துள்ள கூட்டுறவு மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டு "செம்மணியும் தமிழ்மக்களும்" எனும் தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை வருகைதரு விரிவுரையாளர் ஐ.வி.மகாசேனன் "ஜனநாயகப் போராட்டமும் தமிழ்மக்களும்" எனும் தலைப்பிலும், அரசியல், சமூக ஆய்வாளர் எம்.நிலாந்தன் "ஐக்கியநாடுகள் சபையும் தமிழ்மக்களும்" எனும் தலைப்பிலும் கருத்துரைகள் ஆற்றுவர். (ச-25, 66)

# 'நூறு மலர்கள் மலரட்டும்' 2ஆம் நாள் நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 30

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின் இருபத்தேழாவது நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அமரர் மூத்த எழுத்தாளர் வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'பாட்டி சொன்ன கதைகள்' நூல் அறிமுகம் இடம்பெறவுள்ளது.

விசேட கலைநிகழ்வுகளாக சண்நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில், பு.கணேசராசாவின் நெறியாள்கையில் 'முட்டை' மற்றும் பு.கணேசராசாவின் எழுத்துரு, நெறியாள்கையில் 'ஆட்டுக்குட்டி' ஆகிய நாடகங்கள் இடம்பெறவுள்ளன. அதேவேளை மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பாடசாலை மண்டபத்தில் இன்றும், நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25)



## சுகாதாரச் சீர்கேடுகள்


# 6 உணவகங்களுக்கு ரூ.1,25,000 தண்டம்

கிளிநொச்சி, ஓக. 30

உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய ஆறு உணவகங்களுக்குக் கிளிநொச்சி நீதிமன்றில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பூநகரி மேற்பார்வைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்டின் வழிகாட்டலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அண்மையில் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையிலேயே குறித்த 6 உணவகங்கள் சிக்கின. இதன்போது மனிதநுகர்வுக்குப் பொருத்தமற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தப்பட்ட பெருமளவான உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் உணவுப் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகளும் இனங்காணப்பட்டன. இந்தநிலையில் குறித்த உணவக உரிமையாளர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றம் உறுதிப்படுத்தப்பட்டமையையடுத்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை



நேற்று மாலை முதல் வீட்டை விட்டு வெளியேறி காணாமல் போயுள்ளார்

**திரு. ஏகாம்பரம் பரராஜசிங்கம் (வயது 75)**

இராசாவின் தோட்டம் பகுதியில் தங்கியிருந்தார். சிறிது உளநலன் பாதிக்கப்பட்டுள்ளார். காணாமல் போகும்போது இளம் நீல நிற மேற்சட்டையும் (Shirt) கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் (Trouser) அணிந்திருந்தார். தொடர்பு இல:

**075 019 4802**
**077 233 6246**

(CS/59264) J-1

# கண்ணீர்க்காணிக்கை

## கந்தப்பிள்ளை பூரணம்

வவுனியா கிரீஜாபூஷணம் சிவஸ்ரீக - சிவராசாக்குருக்களின் அன்புத்தாயார் கந்தப்பிள்ளை பூரணம் அம்மா 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா கீரிமலை ஸ்ரீமகா முத்துமாரி அம்மாளின் பாதகமலங்களை சென்றடைய பிரார்த்திப்போமாக.

கிரியைகள் பருத்தித்துறையில் நடைபெற்றது.

இவ்வண்ணம்

சிவராஜாகுருக்கள்
077 601 6649

நகுலநவராஜ - உமாபதிஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவும்

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 12 . 1948

மறைவு 28 . 08 . 2025

## கந்தையா பாலசுப்பிரமணியம்

தனங்கிளப்பு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், இருபாலை கிழக்கு கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (28.08.2025) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் கந்தையா - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மாலினியின் அன்புக் கணவரும், தனுசியா (கொழும்பு), வனஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுமார் (கொழும்பு), சேந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தியர்னிகா, தியஸ்மிகா, சன்விகா (கொழும்பு), ஆதிரா, அதிரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாத்தாவும், செல்வராணி, அமிர்தகௌரி, பாலசரஸ்வதி, சந்திரலீலா, சாரதாதேவி, சுசீலா, சறோஜினிதேவி, ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தவேள் ஆகியோரின் சகோதரரும், திருநாவுக்கரசு, திருலோகமூர்த்தி, திருஞானசம்பந்தர், நாகரத்தினம், காலஞ்சென்ற தங்கவேல், மற்றும் செல்வராசா, பொன்னம்பலம், காலஞ்சென்ற ஜெயமலர், மற்றும் விஜயன், சாந்தினி (கனடா), ராசகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (31.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இருபாலை கிழக்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 999 0003, 076 962 4683

இருபாலை கிழக்கு,
இருபாலை.

(CR/45940) J-1

# காரைநகர் மருதடி விநாயகருக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.30

காரைநகர் மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய ஜீரணோத்தா ரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 9.16மணி முதல் 11.15மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள் ளது. தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷே கம் நடைபெறும். நிதியுதவி, பொரு ளுதவி செய்ய விரும்புவோர் விரைவாக உதவிகளை வழங்குமாறும் வங்கியில் வைப்பி லிட விரும்புவோர் இலங்கை வங்கி 1094394 எனும் கணக்கிலக்கத் துக்கு வைப்பி லிட்டு வைப்புச்சீட் டுப் பிரதியை 0767626675, 077 399675 எனும் வட்ஸ்அப் இலக்கங்களுக்கு அனுப்பிவைக்கு மாறும் அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-41)

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் சிற்றுண்டி நிலையத்திற்கு பெண் பணியாளர்கள் தேவை

தொடர்பு: **075 130 6392**

## தாசக கிருகஜக்கு ஆத்மா சாந்தி அழைப்பு



தோற்றம் 07 . 02 . 1960

மறைவு 21 . 08 . 2025

கடந்த (21.08.2025) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது தாயார்

**வெங்கடேஸ்வரக் குருக்கள் சாந்தியம்மா**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (30.08.2025) சனிக்கிழமை காலை 06.00 மணிக்கு தசாகம் நடைபெற்று நாளை (31.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசியம், நாளை மறுதினம் (01.09.2025) திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு சபிண்டிகரணம், எதிர்வரும் (02.09.2025) செவ்வாய்க்கிழமை காலை கிருகஜக்கும் மதிய போசனத்தில் கலந்து அம்மாவின் ஆத்தா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

பொ.வெங்கடேஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்
அனலைதீவு.

ஆனைக்கோட்டை,
ஆறுகால்மடம்,
புது வீதி, கராச் ஒழுங்கை.

077 657 5198, 076 675 8169
077 152 8649, 076 303 7285

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 03 . 1962

மறைவு 09 . 09 . 2024

**அமரர் இராசன் துரைராசா**

திதி: 30.08.2025

ஒளி தந்த சுடர் விளக்கே!
காற்றோடு கலைந்ததுவே அத்தனையும்
ஆயிரம் கோட்டை கட்டினோம்
புயல் கொண்டு போனதுவே
ஆயிரம் உறவு இருந்தென்ன
உங்களைப்போல ஒரு உறவு வருமா?
மதியோ விதியோ விளையாடுகின்றது
கண்ணில் என் உயிர் உள்ளவரை

பிரிவால் துயருறும்
பாசமிகு மனைவி வளர்மதி மற்றும்
குடும்பத்தினர்

இல. 145 வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(CS/59240) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயங்குநிலையின்றி நாவற்குழிச் சந்தை!

## திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஓக.30
சாவகச்சேரிப் பிரதேசசபையின் நாவற்குழி உப அலுவலகத்தின் கீழுள்ள நாவற்குழிச் சந்தியிலுள்ள பொதுச்சந்தை தற்போது இயங்காதநிலையில் காணப்படுகிறது.
இந்தப் பொதுச்சந்தைக் கட்டடம் மரக்கறி மற்றும் மீன் விற்பனைக்கான சகல வசதிகளுடன் காணப்படுகிறது. எனினும் இயங்காதுள்ளது. இதனால் கட்டடத்தின் கூரைச் சீற்றுகள் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருள்களை திருடர்கள் களவாடிச் செல்கின்றனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சந்தைக் கட்டடத்தை இயங்கச்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ச-25, 131)

# இலங்கைக் குற்றக்கும்பலை நாட்டுக்குக் கொண்டுவர ஏற்பாடு

கொழும்பு, ஓக.30
இலங்கையில் இடம்பெற்ற கொலை, கடத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஐந்து பாதாளக் குழு உறுப்பினர்கள் இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை நாட்டுக்குக் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.
எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அவர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்படுவார்கள் எனவும், அதற்குரிய ஆவணங்கள் இராஜதந்திர மட்டத்தில் அனுப்பப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது. இலங்கைப் பொலிஸார் மற்றும் இந்தோனேசியப் பொலிஸார் ஆகியோர் இணைந்து முன்னெடுத்த கூட்டுநடவடிக்கையின் பிரகாரம் அவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(ச-44)

# விரிவாக்கப்பட்டது வரிக்குற்றப்பிரிவு

கொழும்பு, ஓக.30
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிக் குற்ற விசாரணைப் பிரிவு விரிவுபடுத் தப்பட்டுள்ளது. இதன்படி உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தின் 10ஆவது மாடியில் இந்தப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இந்த பிரிவு சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு, மத்திய வங்கி, குற்றப் புலனாய்வுப் பிரிவு, சுங்கம் மற்றும் கலால் துறை போன்ற நிறுவனங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் அதன் கடமைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ச-இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலம்பிராய் தச்சன் தோப்பை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

**செல்வன் ஞானசேகரம் ரஜீவன்**

அவர்கள் 27.08.2025 அன்று கொழும்பு பல்கலை கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **(BA (Hons) in Political Science and Poblic Policy)** பட்டத்தைப் பெற்று எமக்கும் எமது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.
இவர் இன்னும் பல துறைகளில் பட்டம் பெற்று வளர எல்லாம் வல்ல வேலம்பிராய் பத்திரகாளி சமேத வீர பத்திர சுவாமி அருள் பெற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**சிங்கபுத்திரன் குடும்பம்**
**(சின்ன மாமா)**

# INVITATION FOR BID 2025/12

## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall meet the CIDA registration and qualification requirements. Additional details are provided in the Procurement Document.
4. Interested eligible bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services, health village Pannai Jaffna. (T.P:0212222278, Fax: 0212229971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.**
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. **Pre-Bid** Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on commencing at **2.30 P.M** on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | | | From 01.09.2025 until 12.09.2025 | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | | At 2.30 P.M on 08.09.2025 | |
| | Closing and Opening of Bids | | | | | At 10.30 A.M on 15.09.2025 | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2025/CBG/W/04 | Construction of Water Sump and Water Tank at Divisional Hospital, Nainativu | 2.76 | 85 Days | C9 or above (Buildings) | 3,000.00 | 28,000.00 | Till 15.12.2025 |
| NP/04/41/2025/REC/W/13 | Completion of GHC at PMCU Puththur | 8.49 | 135Days | C8 or above (Buildings) | 3,000.00 | 85,000.00 | Till 15.12.2025 |
| NP/04/41/2025/REC/W/20 | Extension and Renovation work at Base Hospital Tellippalai,Jaffna-EU | 1.01 | 71Days | C9 or above (Buildings) | 1,500.00 | 11,000.00 | Till 01.12.2025 |
| NP/04/41/2025/REC/W/21 | Improvement Work of GFATM Building Including Nursing Officers Changing Rooms at Base Hospital, Kayts. | 1.69 | 76Days | C9 or above (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 01.12.2025 |
| NP/04/41/2025/REC/W/22 | Improvement Work of MOO On call Room and Doctors Lounge at Base Hospital, Kayts. | 0.88 | 67Days | C9 or above (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 01.12.2025 |
| NP/04/41/2025/REC/W/23 | Improvement Work at DMO Quarters at Velanai. | 4.08 | 90Days | C8 or above (Buildings) | 3,000.00 | 41,000.00 | Till 15.12.2025 |

**Chairman**
**Regional Committee**
**Regional Directorate Health Service**
**Jaffna.**

(CR 45949) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.12.2000 மறைவு 30.08.2012

**செல்வி துஷாந்தி சிறிசோமாஸ்கந்தன்**

(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, தரம்-7F)



காலமெல்லாம் எங்களைக் காத்திடுவாய்
என எண்ணினோம் - ஆனால்
காலனவன் உனைக் கவர்ந்து
ஆண்டுகள் பதின்மூன்று ஆனதம்மா - ஆயினும்
உன் நினைவு மாறாதம்மா
நெஞ்சினிலே உம்மை வைத்து
நினைவெல்லாம் உமக்காய் கொண்டு
வெம்பி நாம் வடிக்கும் கண்ணீர்
விலகவே இல்லை அம்மா
உம் அழகு மலர் முகம் எம் நெஞ்சை விட்டு
அகலாதம்மா

செ.சிறிசோமாஸ்கந்தன்,
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
சிறி சோமாஸ் அறைக்கும் ஆலை
300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

உன் பிரிவால் துயருறும்
அன்னாபன
அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்.

(CS 3915) A

# மரண அறிவித்தல்

பூவுலகில் 15 . 02 . 1959



மகிமைக்குள் 11 . 08 . 2025

**மூப்பர் செல்வராஜா அப்புக்கண்டு**

பளர்மோ சபை ஸ்தாபகரும் மூப்பரும் (இத்தாலி), சிறக்கூசா சபை ஸ்தாபகர் (இத்தாலி), றெகொபோத் சபை மூப்பர் (ஸ்கொட்லன்ட்)

மல்லாகம் 7ம் கட்டை, சேச் லேனை பிறப்பிடமாகவும் இத்தாலி, ஸ்கொட்லாண்டை வசிப்பிடமாகவும் கொண்ட சபை மூப்பர் செல்வராஜா அப்புக்கண்டு அவர்கள் கடந்த 11.08.2025 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்கண்டு (வில்லியம்), மனைவி இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான போதகர் அல்பேர்ட் அன்ரனி, மனைவி புஸ்ப மலர் (பட்டு) தம்பதியரின் அன்பு மருமகனும், கிறேஸ் (நீனா) வின் பாசமிகு கணவரும், செருபாபேல், சாமுவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர் (பிரான்ஸ்), ஞானமலர் (இலண்டன்), ரஞ்சிதமலர் (இலங்கை), சுதாராசா (சுவிஸ்), தவமலர் (இலங்கை), குமுதினி (இலங்கை), பிறேமராசா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றொபின்சன் (பிரான்ஸ்), அன்ரன்றொபேர்ட் (இலண்டன்), ரகு (லைபனான்), ஜெசி (சுவிஸ்), தவநேசன் (இலங்கை), வினோதராஜா (கட்டார்), சுகிர்தா (இத்தாலி), ஏஞ்சலினா (சுகந்தி - இத்தாலி), காலஞ்சென்ற போதகர் கிறிஸ்றோபர் (அலன்), போதகர் ஜொலி றொபின்சன் (சுவிஸ்), வதனி வேர்ஜினியா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், இரட்ணராசா (இத்தாலி), ஆஷா, பறீனா (சுவிஸ்), போதகர் சசிகரன் (சுவிஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், சாங்கர் கெலனா (ஸ்கொட்லண்ட்) என்பவரின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.08.2025) சனிக்கிழமை **Rehoboth The Living Church, 14 Hillkirk Place, Springburn, G21 1TG, Scotland** இல் காலை 8.00 மணிக்கு நடைபெற்று, அதனை தொடர்ந்து **Linn Cemetery, 382 Drakemire Dr, Glasgow, G45 9SR, Scotland, UK** இல் நல்லடக்கம் செய்யப்படும்.

இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 12.30 மணிக்கு நிகழ்வுகளை கல்வாரி தேவாலயம், சேச் லேன், 7ஆம் கட்டை மல்லாகத்தில் **https://www.funeralstreamingscotland.co.uk/selvarajahappukandu** இல் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


செ.செருபாபேல் (மகன்) 00447961857248
த.திசான் (மருமகன்) 0770852634

தகவல்: குடும்பத்தினர்.
மனைவி மற்றும் பிள்ளைகள்.

(CS 3914) A

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 02 . 1935



மறைவு 28 . 08 . 2025

**வைரமுத்து சின்னத்தம்பி**

நாவற்குழி தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் கோண்டாவில் M.S. வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சின்னத்தம்பி கடந்த (28.08.2025) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து - நாகம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற கணபதி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், கௌரி தேவி (கனடா), கௌசலாதேவி, கௌலேல்வதி (ஜேர்மனி), விஜயகுமாரி (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (டோகா), ஜெகதீஸ்வரன், பாமினி(லண்டன்), சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராசா (கனடா), தவபாலன், சுந்தரலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சத்தியவான் மற்றும் மைதிலி, ராதிகா, ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்செறன்றவர்களான கந்தையா, ராசம்மா மற்றும் சிவபாக்கியம், மகேஸ்வரி, பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்செறன்றவர்களான சின்னையா, மகேஸ்வரி, செல்லையா மற்றும் இராசதுரை, அற்புதராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயாபரன், சாளினி, தர்சனா, வவீசன், வேணுஜன், சகிதா, இசைவாணி, காந்தீசன், கிருஷன், றோசன், ஜான்சி, டிலானி, புவிதா, பர்மிலா, தனோஸ், நகேஷ், தேனுசன், ரதுஷா, கனிஸ், ஜஸ்மிதா, அஸ்வி, கஸ்வினா, சப்ரியா, பாகிதா, பௌமி, பர்சாத், பாசித், சம்விறான் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2025) ஞாயிறு காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரயைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


M.S லேன், கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 3913) A

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 10 . 1940



மறைவு 29 . 08 . 2025

**மாணிக்கம் கணேஸ்**

(ஓய்வுபெற்ற நூலக உதவியாளர்,பொதுசன நூலகம், சங்கானை. முன்னாள் பட்டினசபை உறுப்பினர், வலிமேற்கு பிரதேச சபை)

நிற்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கணேஸ் அவர்கள் நேற்று (29.08.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரவன் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கந்தசாமி, இராசம்மா, மீனாட்சிப்பிள்ளை மற்றும் கிளியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராணியின் அன்புக் கணவரும், வதனமாலா, அமரர் றமேஸ், சித்திரமாலா (ஜேர்மனி), விஜயமாலா, சத்தியமாலா (ஆசிரியர், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்), சுரேஸ்பாபா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஜெயநேசரூபன் (ரவி), மோகன் (ஜேர்மனி), வேலாயுதம், சந்திரசேனா (விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், ருகன்சிகா (ஜேர்மனி), டக்சிகா, டிதன் (ஜேர்மனி), நிரஞ்சிகா, டினேஸ் (ஜேர்மனி), லதுஷன், அஸ்மிதன், லினுஜன், அனோசிகா, டிலக்ஷா, ஹபிஷஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாளிகாவத்தை வீதி, நிற்சாமம் சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (31.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 3916) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிக்குளம் மக்களின் மீள்குடியமர்வு எப்போது?

## ரவிகரன் எம்.பி. கேள்வி

**மன்னார், ஓக.30**

**மன்னார் சிலாவத்துறைப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளத்தில் மக்களின் காணிகளையும், வீடுகளையும் அபகரித்து குடிகொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றி முள்ளிக்குளம் கிராம மக்கள் எப்போது மீள்குடியேற்றப்படுவார்கள்? என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

சிலாவத்துறைப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பில் தீர்க்கமான முடிவுதேவை. மக்களின் காணிகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் கடற்படையினர் வெளியேறவேண்டும். முள்ளிக்குளம் கிராம மக்களைக் குடியேற்றும் நோக்குமுள்ளதா? இல்லையா? என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இவ்விடயத்தில் ஆலோசனை பெறுவதற்காக பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பதில் கிடைக்கப்பெற்றவுடன் இந்த விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் கடற்படையினரால் தெரிவிக்கப்பட்டது (ச-25-26, 246)



# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.30

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்திறவுகோல் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு தலைமையக முகாமையாளர் தலைமையில் அண்மையில் இராமாவில் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகியவற்றின் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41)



# காணிகளை விடுவிப்பதற்கு அரசுக்கு ஆர்வமில்லை!

## வலி.கிழக்குத் தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிப்பதில் போதிய ஆர்வம் கொள்ளவில்லை என வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரில் இராணுவத்தினரை பொது இடங்களில் இருந்து அகற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் நிறைவுறுத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எம்மை மீண்டும் மீண்டும் ஏமாற்றிவருகின்றன. மக்களின் நிலம் மக்களுக்குச் சொந்தமானது என்ற தேர்தல் பரப்புரையுடன் ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கமும் தமிழ் மக்கள் விடயத்தில் எந்த உத்தரவாதத்தினையும் நிறைவேற்றவில்லை.

பலாலியில் வீதியை விடுவித்துவிட்டு நடமாடும் சுதந்திரத்துக்கு தடைபோடுகின்றனர். அங்கு மக்களின் நடமாடும் சுதந்திரத்தின்மீது மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

எவ்வித நியாயப்பாடுகளும் இன்றி தமிழ் மக்களின் தனியார் காணிகளிலும் நிர்வாகம் சார்ந்த மற்றும் பொதுத் தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களிலும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். தையிட்டி உள்ளிட்ட காணிகளின் மக்கள் வீதியில் போராடுகின்றபோதும் அவற்றுக்குத் தீர்வு வழங்கப்படவில்லை. எனவே தாமதம் இன்றி இராணுவத்தினரை வெளியேற்றி தமிழ் மக்களின் வாழ்வுரிமையை உறுப்படுத்த வேண்டும்- என்றார். (ச-20)

# நிலக்கடலைச் செய்கை வயல்விழா முல்லையில்

முல்லைத்தீவு, ஓக.30

முல்லைத்தீவு விவசாயத் திணைக்களமும், (தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் வழிகாட்டல்) கிறிசலிஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய விவசாயிகள் வயல் வியாபார பாடசாலைக் குழுக்களின் சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றிய நிலக்கடலைச் செய்கையின் வயல்விழா தண்டுவான் விவசாய விரிவாக்கல் பிரிவில் பழம்பாசிக் கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதி சிவசீபன், உதவி விவசாயப் பணிப்பாளர் மேரிஆஞ்சலா லக்சன், பாடவிதான உத்தியோகத்தர் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள், கிறிசலிஸ் நிறுவன வட மாகாணப் பணிப்பாளர் ம. பிரபாகரன், விவசாய வயல் வியாபாரப் பாடசாலைத் திட்ட முகாமையாளர் ச. தேவதாஸ் மற்றும் சிரேஸ்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-19)



# நல்லிணக்கச் செயற்பாடுகள் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.30

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் உள்வாங்குதல், நல்லிணக்கம் மற்றும் சமூக நீதிக்கான பன்முகச் செயற்பாடுகள் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மஸ்ஜிதுல் முகமதியாப் பள்ளியில் நடைபெற்றது.

யாழில் சொண்ட் நிறுவனத்தின் ஊடாக யாழ். சர்வமதக் குழுவுடன் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. இதன்போது யாழ்.மாவட்டத்திலுள்ள இன, மத நல்லிணக்கத்தைப் பாதிக்கும் காரணிகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (ச-41-27)

### யாழ். உள்ளூராட்சிமன்ற

# பெண்கள் வலையமைப்பு புதிய நிர்வாகம் தெரிவு!

யாழ்ப்பாணம், ஓக.30

இலங்கை உள்ளூராட்சிமன்றங்களின் சம்மேளனத்தின் யாழ். மாவட்டத்துக்கான பெண்கள் வலையமைப்பின் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



புதிய நிர்வாகத்தின் தலைவராக வேலணைப் பிரதேசசபையின் உறுப்பினர் அனுஷியா ஜெயகாந், உப தலைவராக யாழ். மாநகரசபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா, செயலாளராக நல்லூர்ப் பிரதேசசபை உறுப்பினர் கௌசலா சிவா, உப செயலாளராக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் பௌலினா சுபோதினி தயாளராசா, பொருளாளராக வலிமேற்குப் பிரதேசசபை உறுப்பினர் ஜெயகாந்தன் துவாரகாதேவி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-25,27, 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்கொணர்வு...

மனு மீதான தீர்ப்பு ஒக்ரோபர் மாதம் வழங்கப்படவுள்ளது.

குறித்த 24 பேரில் 3 பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனு யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், சம்பவம் நடைபெற்ற பகுதியானது சாவகச்சேரி நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குட்படுவதால் வழக்கு சாவச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவந்தன.

வழக்குத் தீர்ப்புக்காக நேற்றுத் திகதியிடப்பட்ட நிலையில், தீர்ப்புக்கு மற்றொரு தவணை வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-28)

## காணாமல்...

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றது. இதை முன்னிட்டே, போரின் போதும் அதற்கு முன்னரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி, வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டமும் பேரணியும் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பேரணி காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்கா முன்பாக ஆரம்பமாகி செம்மணி வரை இடம்பெறும். பின்னர் செம்மணியில் போராட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுபோல், மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து பேரணி ஆரம்பமாகி காந்தி பூங்கா வரை நடைபெறவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரியும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் இடம்பெறும் இந்தப் போராட்டத்தில் மக்கள் பெருமளவில் கலந்துகொள்ளவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-66)

## இனப்...

ஆரம்பமானது. கையெழுத்துச் சேகரிப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா, முன்னாள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ், வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா பிரகாஷ், யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் இம்மானுவேல் தயாளன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கினர்.

யாழ்.நகரின் பல பகுதிகளிலும் நேற்று மாலை வரை கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டுத் தமது ஆதரவை வழங்கினர்.

கையெழுத்துப் போராட்டத்தின் ஒருபகுதியாகச் சர்வதேச நீதிகோரித் துண்டுப் பிரசுரங்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை, நேற்று வடக்கில் ஆரம்பமான கையெழுத்துப் போராட்டம் தொடர்ச்சியாக ஒருவார காலத்துக்கு முன்னெடுக்கப்படவுள்ளது. கிழக்கில் கையெழுத்துச் சேகரிக்கும் போராட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. (அ-ம-66-17-20-26)

## காணாமல்... (சுவரொட்டி)

டுள்ளன. சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## மருத்துவ...

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரணில் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டதும் ரணிலுக்குத் திடீர் சுகவீனம் ஏற்பட்டது. இதையடுத்து அவர், வெலிக்கடைச் சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் கொழும்புத் தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவரின் உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து, அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். தொடர்ச்சியான சிகிச்சையைத் தொடர்ந்து ரணிலின் உடல்நிலையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையடுத்து, அவர் நேற்று மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

எனினும் ரணில் ஓய்வில் இருக்கவேண்டும் என்றும், மருத்துவப் பராமரிப்பு அவசியம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ரணிலுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றம் பிணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## மருத்துவர்களின்...

ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொலைபேசி இலக்கங்கள் மூலமே இந்த ஊடுருவல் இடம்பெறுகின்றது. குறிப்பாக, +1289, +234 என்றவாறாக ஆரம்பிக்கும் தொலைபேசி இலக்கங்களில் இருந்து அழைப்புகள் வந்தால் மிகுந்த அவதானமாகச் செயற்படவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஊடுருவல்கள் மருத்துவர்களின் வட்ஸ் அப் செயலிழக்கச் செய்யப்பட்டு, அவர்கள் அனுப்புவது போன்ற நிதிக் கோரிக்கைகள் ஏனைய மருத்துவர்களுக்கும், அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. பின்பு, அந்த வட்ஸ் அப் செய்திகளுக்குப் பதில் போடுகின்றவர்களின் கணக்குகளிலும் ஊடுருவல் இடம்பெறுகின்றன. இந்தக் குற்றச்செயல், வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட பல்வேறு தனிப்பட்ட தரவுகளையும் திருடும் முயற்சியாக இருக்கலாம் என்பதால், இந்த விடயம் தொடர்பில் மருத்துவர்கள் அச்சத்தை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இத்தகைய மோசடிகளால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் சிலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எனவே, பொதுமக்கள் தமது தனிப்பட்ட கடவுச் சொற்களையும், 'ஒரு தடவை பயன்படுத்தும் கடவுச் சொற்களையும்', இதர தனிப்பட்ட தகவல்களையும் வேறு எவருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புதிய குற்றக் கும்பலின் இணைய ஊடுருவல் பாரதூரமானது என்றும், மீட்டெடுக்க முடியாத வகையில் ஊடுருவல் இடம்பெறுகின்றது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## 2,000 ரூபா...

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவால் வழங்கப்பட்ட இந்த நினைவுத்தாளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பெற்றுக்கொண்டார். அத்துடன் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட ஐந்தாவது நினைவுத்தாள் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## டிப்பரின்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்து, பரந்தன் அரச விதை உற்பத்தி நிலையத்துக்கு முன்பாக உள்ள தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இதன்போது பேருந்துக்குப் பின்னால் வந்த டிப்பர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இ.போ.ச. பேருந்துடன் மோதியுள்ளது. இதைத் தொடர்ந்து, டிப்பருக்குப் பின்னால் மோட்டார்சைக்கிளில் வந்த இளைஞர்களும் டிப்பரின் பின்னால் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர்களில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன், மற்றையநபர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், மேலதிக சிகிச்சைகளின்போது அவரும் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - முரசுமோட்டைப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி இசைவாணன் (வயது-24), கந்தளாய் மூதூர் பகுதியைச் சேர்ந்த நவரத்தின ராஜா செந்தூரன் (வயது-25) ஆகிய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

**குற்றுயிராய் கிடந்தவர்களை வேடிக்கை பார்த்த மக்கள்!**

இந்தக் கோரவிபத்தில் படுகாயமடைந்த இரு இளைஞர்களில் ஒருவர் நீண்ட நேரம் குற்றுயிராய் கிடந்துள்ளார். சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்ற பின்னரே மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பொதுமக்கள் எவரும் அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்பதுடன் தாம் அழைத்த பின்னரும் மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவவில்லை என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-113-19-246)

## மாகாணசபைத்...

தெரிவித்தார். ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கு பின்வாங்கும் தரப்பு அல்ல. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இரண்டு தேர்தல்களை நாங்கள் அடுத்தடுத்து நடத்தியுள்ளோம். இரண்டிலும் மக்கள் எம்முடன் இருந்துள்ளனர். எனவே, மாகாணசபைத் தேர்தலை நாங்கள்தான் தாமதப்படுத்துகின்றோம் என்று வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை.

எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட்ட காரணத்தாலேயே, மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. குறித்த அறிக்கையை மீளாய்வு செய்து நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குரிய செயற்பாடு ஆரம்பமாகியுள்ளது. தேர்தல் திகதி தொடர்பில் எம்மால் எதுவும் கூறமுடியாது. ஏனெனில் அது தேர்தல் திணைக்களத்துடன் தொடர்புடைய விடயம். ஆனால், தேர்தலை நடத்துவதற்கு முழுமையான பங்களிப்பை நாங்கள் வழங்குவோம் - என்றார். (அ-ம-44)

## 130,000...

கொலைகளுக்கு நீதிகோரி, ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து தாயகச் செயலணி அமைப்பால் வடக்கு - கிழக்கில் கையொப்பச் சேகரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 23ஆம் திகதி ஆரம்பமான ஒரு வாரத் திட்டம் கொண்ட இந்தப் போராட்டம் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. இந்த நீதிகோரும் போராட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் ஒப்பமிட்டுள்ள நிலையில், அவர்களின் கையொப்பங்களுடன் அந்த ஒன்பது அம்சக் கோரிக்கைகளும் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்படவுள்ளன. (அ-ம-20-26)

## 10 என்புத்...

களின் 37ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 10 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளில் 10 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 187 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 174 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பிணைந்த...

அகழ்வுப் பணிகளின் நேற்றைய நாள் நடவடிக்கையின்போதே, மேற்படி என்புத் தொகுதிகள் அவதானிக்கப்பட்டதுடன், அவற்றை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், உடைந்த காப்பொன்றும் சான்றுப் பொருளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை – ஜப்பான்

# நட்புறவு வீதித் திட்ட பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.30

இலங்கை - ஜப்பான் நட்புறவு வீதி அபிவிருத்திப் பணிகள் கடந்த வியாழக்கிழமை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

பத்தரமுல்லையில் உள்ள 2 கிலோமீற்றர் நீளமான இலங்கை - ஜப்பான் நட்புறவு வீதி, சுமார் 203 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட செலவில், தார் வீதியாக அபிவிருத்தி செய்யப்படுகிறது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மதிப்பீட்டின்படி, இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் இந்த அபிவிருத்திப் பணிகள் அடுத்த ஆறு மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்துப் புனரமைப்புப் பணிகளையும் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(எ-இ)

## கைதானார் நிமல் லான்சா

கொழும்பு ஓக.30

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நிமல் லான்சா கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கொச்சிக் கடைப் பொலிஸாரிடம் சரணடைந்த பின்னர் நிமல் லான்சா நேற்று கைது செய்யப் பட்டார். 2006ஆம் ஆண்டு இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ச-இ)

---

**விற்பனையாளர் தேவை**

யாழ். நகரிற்கு அண்மையாகவுள்ள பாடசாலை உபகரணப் பொருள் விற்பனை நிலையத்திற்கு பகுதிநேர விற்பனையாளர் தேவை (காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை)

தொடர்புகளுக்கு: 074 164 8953

(CS 39177)A

---

**S.V.M Agencies (PVT) LTD**

**பணியாளர் தேவை**

எமது நிறுவனத்திற்கு கணணி இயக்குனர்கள் (Computer Operator, MS Office) நிதி மற்றும் பிற வேலைகளுக்கும் பணியாளர்கள் தேவைப்படுவதால் எதிர்வரும் 01, 02 Sep 2025 காலை 9.00 மணியில் இருந்து 5.00 மணிக்குள் சுயவிபரங்களுடன் நேரில் வரவும்.

S.V.M Agencies (PVT) LTD
அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்
No. 154, Hospital Road, Jaffna.
T.P No: 021 222 2991, 021 492 5825

(CS/59262) J-1

---

**உடனடி வேலை வாய்ப்புகள்**

யாழ்நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு
**City Tex - Nallur**
அனுபவம் உள்ள. பழகவிரும்பும் பெண் விற்பனையாளர் உடன் தேவை.
அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் - 35000 + Bonus, வயது - 18 - 25 வரை.
முழு நேரம் பகுதிநேர வேலை
மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்.

**021 221 6185, 076 666 3574**

(CS/3911B) J-1

---

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து வழங்கப்பட மாட்டாது. ஏக்கர் 13 இலட்சம்.

தொடர்பு : Whatsapp : **0044 740 537 3526**

(CS 59217) E

---

**மணல் விற்பனைக்கு**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

அல்லது

- தென்மராட்சி 50,000,
- யாழ்மாவட்டம் 55,000
- வடமராட்சி 58,000

விறியோகிக்கப்படும்.

தொடர்பு:- **076 324 9977**

---

சங்கீதம் 116:15 கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.

**நன்றி செலுத்தும் ஆராதனை அழைப்பு**



மண்ணில் 31 • 01 • 1951 — விண்ணில் 25 • 08 • 2025

**வண. யோசுவா தயானந்தன் வில்லியம்**
(போதகர் சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்)

கடந்த 25.08.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது தகப்பனாரின் வாழ்வுக்காக நன்றி செலுத்தும் ஆராதனை இன்று 30.08.2025 (சனிக்கிழமை) மதியம் 12.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆராதனையில் பங்கு கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தயவுடன் அழைக்கின்றோம்.


(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

தகவல்: குடும்பத்தினர்
எபெனேசர் இல்லம்,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தொடர்புகளுக்கு:
ஜெறோம் (யாழ்ப்பாணம்) +94 777729397
பாஸியோ (கனடா) +1 6476562275

---

**மரண அறிவித்தல்**



**செல்லையா பாலரத்தினம்** (நெல்லியான் பாலா)

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் நாரம்பிட்டிய),
(முன்னாள் பராமரிப்பு முகாமையாளர் Phoenicia Hotel Kuwait)

பொன்னாலையை பிறப்பிடமாகவும் நெல்லியான் மற்றும் தொல்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலரத்தினம் கடந்த (28.08.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு பொற்கொடி தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயலக்சுமியின் அன்பு கணவரும், விஜிதா (மருந்தாளர் Canada), கலாநிதி (Dr). சுமித்தா (துணைப்பேராசிரியர் USA) பிருந்தாவன் (சிரேஸ்ர பொறியியலாளர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவச்செல்வன் (Canada), தணிகைக்குமரன் (பௌதிகவியல் ஆசிரியர், USA) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷகானா (Canada), ஷஞ்சனா (Canada) ஷதுர்சனா (USA), சத்விஹா (USA) ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்ற நாகரத்தினம், காலஞ்சென்ற செல்வரத்தினம், காலஞ்சென்ற இராசரத்தினம், (முன்னாள் இரசாயணத் தொழிற்சாலை மேற்பார்வையாளர் பரந்தன்), காலஞ்சென்ற விஜயரட்ணம் (ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர்), சந்தனகுமரன் (Germany), காலஞ்சென்ற சிவகுமாரன் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலக்சுமி, காலஞ்சென்ற இராசகுமார் (ஓய்வு பெற்ற அதிபர்) காலஞ்சென்ற சந்திரகுமார், சூரியகுமார் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) தனலக்சுமி, செல்வலக்சுமி, ஸ்ரீகுமார் (V.S Red Onion Seeds) மற்றும் நந்தகுமார் (உதவிப் பொலிஸ் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை (31.08.2025) ஞாயிற்றுக்கிழமை தொல்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று தகனத்துக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
பிருந்தாவன் (மகன்) +94776420783 (Sri Lanka).
விஜிதா (மகள்) +016476325469 (Canada).
சுமித்தா (மகள்) +012409106613 (USA).

தகவல்: குடும்பத்தினர்.

(CS 28201) A

---

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 01 • 07 • 1944 — மறைவு 23 • 08 • 2023

அமரர்
**திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி**
திதி : ஸப்தமி

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவரே
இன்னும் சில காலம் எங்களோடு வாழ மறந்ததேன்?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த எங்கள் தெய்வம்
அணைந்து ஆண்டுகள் இரண்டு உருண்டோட
எங்கள் மனம் உங்களை தேடி நிற்கிறது துவண்டு நிற்கின்றோம்.

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில்.

குடும்பத்தினர்

(CS/3912) J-1

---

**உடனடி வேலை வாய்ப்புகள்**

யாழ்நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு பகுதி நேர அல்லது முழுநேர வேலைவாய்ப்பு
**J.P.Y Fashion Club (Pvt) Ltd**
அனுபவம் உள்ள, பழகவிரும்பும் ஆண் அல்லது பெண் விற்பனையாளர் உடன் தேவை.
சம்பளம் - 35000 + Bonus, வயது - 18 - 25 வரை.
மதிய உணவு கொடுக்கப்படும்.

**077 514 8601, 021 222 2789**

(CS/3911B) J-1

---

**வீடு விற்பனைக்கு**

நல்லூர் செட்டித்தெரு லேனில் 05 அறைகளையுடைய வீடு விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

தொடர்பு:- **076 537 2278**

(CS/3913) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org